# திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும்பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலில் குறைபாடு

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் நிதிப் பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

முறையே ரூபா 6,080,248 மற்றும் ரூபா 5,032,720 ஆன ஐந்தொகையில் காட்டப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணை முறிகளின் கிரயம் முறையே ரூபா 6,569,961 மற்றும் ரூபா 5,030,355 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதிகளைப் பெற்றுக்கொண்ட முறைமை தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

ரூபா 247,696 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி 2007 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் மீதி என்பது அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

ரூபா 5,032,720 தொகையான திறைசேரி பிணை முறிகள் மற்றும் ரூபா 400,000 தொகையான நிலையான வைப்புக்களுக்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதிகளின் உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| 2002 யூன் 12 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்று நிருபம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(ஆ) ஆம் பிரிவு | திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 400,000 தொகையான நிலையான வைப்புக்களின் முதலீட்டிற்காக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 73,963 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 345,997 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 419,960 தொகையான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. இந்த

வீழ்ச்சிக்கு முதலீட்டு அடிப்படையிலான வட்டி வருமானம் குறைவடைதல் அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1998 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான 13 ஆண்டுகளின் போது திரைப்படக் கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கான ஓய்வூதியம், மருத்துவ உதவி, மரண உதவி என்பனவாக ரூபா 17,685,980 கூட்டுமொத்த தொகை வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற 49 நபர்களுக்காக ஓய்வுதியமாக ரூபா 1,134,000 தொகையும், ஆண்டின் போது மரணமடைந்த 02 ஓய்வுதியக்காரர்களை உள்ளடக்கி ஐந்து கலைஞர்களுக்கு மரண உதவியாக ரூபா 50,000 தொகையும், மருத்துவ உதவியாக ஒரு நபருக்கு ரூபா 5000 தொகையுமாக ரூபா 1,189,000 மொத்த பெறுமதி செலுத்தப்பட்டிருந்தது. 2004 செப்தெம்பர் 21 ஆந் திகதி நடை பெற்ற 79 ஆவது இயக்குனர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட 13 கலைஞர்களில் 04 பேருக்கு மாத்திரம் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்ததுடன் நம்பிக்கையாளர் சபை நியமிக்கப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டின் போது எஞ்சிய 09 பேருக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனைத் தவிர்த்து புதிதாக ஓய்வூதியம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

#### 3.2.1 அதிகாரச்சட்டத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளாமை

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 1986 இன் 3 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாகம், முகாமைத்துவம், கட்டுப்பாடு

என்பவற்றிற்காக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரம் கூட்டப்பட்டிருந்தது.

(ஆ) 1986 இன் 3 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் குறிக்கோள்கள் 2011 ஆம் ஆண்டிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) திரைப்பட கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் உதவியளிக்கும் வகையில் அறக்கொடை நிதியங்கள், சேமிப்பு நிதியங்கள், சேமிப்பு அல்லது சிக்கன சங்கங்கள் மற்றும் ஏனைய சமமான உத்தேச திட்டங்களை அமுல்படுத்துதல்.

(ii) தகைமைகளைப் பெற்ற கலைஞர்களுக்கு அல்லது தொழில்நுட்பவியலாளர்களுக்கு அறுபது வயதினை அடைந்ததன் பின்னர் கடன், படிகள், வீட்டு வசதிகள் அல்லது ஏனைய சமமான நலன்களை வழங்குதல்

இவற்றினை அமுல்படுத்துவதற்கு போதியளவு நிதிகள் நம்பிக்கைப் பொறுப்பிடம் இல்லை என தலைவர் தெரிவித்திருந்தார்.

### 3.2.2 அமுல்படுத்தப்படாத நம்பிக்கைப் பொறுப்பு சபைத் தீர்மானம்

நம்பிக்கைப் பொறுப்பின் நிலையான வைப்புக்களிலிருந்து கிடைக்கும் வருடாந்த வட்டியும் திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பிற்கு கிடைக்கும் ரூபா 200,000 தொகையில் ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்படுவதுடன் நம்பிக்கைப் பொறுப்பின் நிதி நிலைமையினை மேலும் மேம்படுத்துவதற்காக 2004 செப்தெம்பர் 21 ஆந் திகதி இடம்பெற்ற 79 ஆவது நம்பிக்கைப் பொறுப்புச் சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான பல தீர்மானங்கள் 2011 ஆம் ஆண்டின் போதும் அமுல்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந் நிலைமையினை கடந்த கணக்காய்வு அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாட்டினை மேற்கொள்வதற்காக நம்பிக்கைப் பொறுப்பினால் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2.3 ருக்மணி தேவி ஞாபகார்த்த நிதியம்**

ரூபா 462,778 தொகையான ருக்மணி தேவி ஞாபகார்த்த நிதியத்தினைப் பயன்படுத்தி பாடகர் ஒருவருக்கு இந்தியாவில் ''பூனா'' திரைப்பட நிறுவனத்தில் பட்டபின் படிப்பு பட்டத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக உத்தேசிக்கப்பட்ட புலமைப்பரிசில் திட்டம் 1985 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

1986 இன் 3 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிக்கோவைகளின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தினை மேம்படுத்தும் வகையில் மாதாந்தம் கொடுப்பனவு செய்வதற்கு போதியளவு பணத்தினை மாத்திரம் நிறுத்தி வைத்து இப் பணத்தினை வினைத்திறனான முதலீடு ஒன்றில் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் மாதாந்த சராசரிச் செலவு ரூபா 100,000 மற்றும் ரூபா 150,000 இற்கு இடைப்பட்ட அளவில் காணப்படுவதுடன் ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூபா 1 மில்லியன் தொடக்கம் ரூபா 11/2 மில்லியன் வரையான மிகை நிதிகள் வங்கி நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**4. கணக்களிதன்மையும் நல் ஆளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிரூபத்தின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பினால் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 02 மாதங்கள் தாமதித்து 2012 மே 04 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிரூபத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் கணக்கு நடவடிக்கைகள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப் போது நம்பிக்கைப் பொறுப்பின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான சேகரிப்பு

(இ) ஓய்வூதியக் கொடுப்பனவு

(ஈ) கணக்கேடுகளைப் பேணல்

(உ) முதலீடு